**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 96/2016 Date:22.08.2025**

**( PW3)- பீர் முகம்மது**

<u>**1, 2, 5, 6, 7** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படிக்கிறேன் என்றால் ஐடிஐ படித்துள்ளேன். நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் நான் எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் வசித்து வருகிறேன். நான் பிறந்தது முதல் இன்று வரை மேற்படி முகவரியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இன்று என்னுடன் எனது அண்ணனான வாதியும் 2ம் சாட்சி இப்ராகிம் என்னுடன் வந்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரதிவதிகள் யார் யார் என்றால் 1ம் பிரதிவாதி பீர்முகம்மது ஆவார். 2ம் பிரதிவாதி வசீர் ஆவார். 3ம் பிரதிவாதி நஜிமுதீன் ஆவார். 4ம் பிரதிவாதி அரிஅக்பர் ஆவர், மற்ற பிரதிவாதிகள் ஞாபகம் இல்லை.

2. நான் பள்ளிக் கூடத்தில் என்ன வேலை பார்த்தேன் என்றால் உதவியாளராக வேலை பார்த்தேன். நான் எப்போது இருந்து வேலை பார்த்தேன் என்றால் நான் 2003 லிருந்து 2012 வரை வேலை பார்த்தேன். எனக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் உண்டா என்றால் கிடையாது. என்னை பள்ளியில் வேலைக்கு சேர்த்துவிட்டது எனது வாதியாகிய அண்ணன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வாதி தான் பள்ளியின் தாளாளராக இருந்தார் என்றால் சரிதான். பள்ளியின் அனைத்து சாவிகளையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான், பள்ளி முழுவதும் என்னுடைய கட்டுப்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். நான் காவலாளராக வேலை செய்யவில்லை என்றால் சரிதான்.

3. பொதுவாக பள்ளியின் அனைத்து சாவிகளும் பள்ளியின் மேலாளர் மற்றும் தாளாளரிடம் இருக்கும் என்றால் சரிதான், வெளிச்சாவி மட்டும் என்னிடம் இருக்கும். வெளிச்சாவி என்றால் மெயின்கேட், வெளிகேட், முதலிய சாவிகள் என்னிடம் இருக்கும். நான் முன்னால் அனைத்து சாவிகளையும் என்னிடம் கொடுத்துவிட்டார்கள் என்று தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பழைய பள்ளியும் புதிய பள்ளியும் ISSK 50/1986 சங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது என்றால் தெரியும்.

மேற்படி சங்கம் எங்கு பதியப்பட்டது என்றும் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

4. எனது சகோதரர் மேறப்டி சங்கதின் பொதுச் செயலாளர் என்பதைக் காட்ட வாதி எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கம் எத்தனை ஆண்டுகள் செயல்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சங்கத்தின் கட்டுப்பாட்டில் தான் பள்ளிகள் செயல்பட்டது என்றால் சரிதான். பள்ளிக்கூடத்தை எனது அண்ணான வாதிதான் நடத்திவந்தார் என்றால் சரியல்ல. சுனாமி எந்த வருடம் தாக்கியது என்றால் ஞாயிறு கிழமை தாக்கியது. அந்த நாள் பள்ளிகளுக்கு விடுமுறை என்றால் சரிதான். விடுமுறை தினத்தில் எனக்கு வேலை கிடையாது என்றால் மீட்டிங் இருந்தது. விடுமுறை தினங்களில் அலுவலகம் செயல்படுமா என்றால் மீட்டிங் நடைபெற்றது. மேறப்டி தினத்தில் மீட்டிங் நடந்ததை காட்ட வாதி எந்த ஆவணமும் தாக்கல் செயய்வில்லை என்றால் சரியல்ல.

5. சுனாமி பேரழிவிற்கு பிறகு பள்ளி எங்கு எந்த காலத்தில் செயல்பட்டது என்றால் SPM காலணியில் செயல்பட்டது தேதி ஞாபகம் இல்லை. சுப்பிரமணியபுரத்தில் பள்ளி எந்த காலத்தில் நடைபெற்றது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்டுள்ள NGo அமைப்பின் பெயர் என்ன என்றால் கன்சசன் இந்தியா பவுண்டேசன் ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும் அது கன்சைன் இந்தியா பவுண்டேசன் என்றாலும் எனக்கு தெரியாது. மேற்படி அமைப்பு எங்கு செயல்படுகிறது என்றால் சென்னையில் செயல்படுகிறது. சென்னையில் செயல்படவில்லை என்றாலும் நாகர்கோவிலில் செயல்படவில்லை என்றாலும் சரியல்ல நாகர்கோவிலிலும் கிளை உள்ளது. மேற்படி பவுண்டேசனின் நிபந்தனைகள் என்ன என்றால் பள்ளிக்கூடத்தை 30 வருடம் நடத்துவதற்கு வாதியிடம் எழுதி வாங்கினார். இதை தவிர வேறு எந்த காரணத்திற்காக ஒப்பந்தம் மேற்படி அமைப்புடன் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கனிபா குடும்பம் பள்ளிக்கூடத்தை சொத்தை எவ்வாறு உரிமை மாற்றம் செய்யப்பட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணன் மசூதிக்கு சொத்தை எப்போது தானமாக கொடுத்தார் என்றால் 27.12.2012 ல் கொடுத்தார்.

6. பள்ளிக்கூடத்தின் இடங்கள் எனது அண்ணனின் உரிமைப்பட்டது என்றாலும் அது சங்கத்திற்கு உரிமைப்பட்டது என்றாலும் சரிதான். சங்கத்திற்கு உரிமைப்பட்ட சொத்தை தானமாக கொடுக்க எனது அண்ணனுக்கு உரிமையில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 22.01.2012 தேதி யில்எனது அண்ணனை சங்கத்தில் இருந்தும்

பள்ளியின் தாளாளர் பதவியில் இருந்தும் நீக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல தற்போது எனது அண்ணன் தான் தாளாளராக உள்ளார். எனது அண்ணனான வாதி சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வாதி என்னை எப்போது அழைத்தார் என்றால் 28.12.2012 அன்று அழைத்தார். அதற்கு முன்பு எப்போது காவல் நிலையம் சென்றோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 28.12.2012 அன்று வாதி எப்போது காவல் நிலையம் சென்றார் என்றால் இரவு 8.30 மணியளவில் சென்றார். இரவு 8.30 மணிக்கு முன்பு வாதி எங்கு இருந்தார் என்றால் காவல் நிலையத்தில் கட்டப்பஞ்சாயத்து செய்து கொண்டிருந்தார். அப்போது உள்ள காவல் ஆய்வாளரின் பெயர் பிரபாகரன் ஆகும். தற்போது எனது அண்ணனான வாதி பள்ளிக்கூடத்திற்கு செல்கிறாரா என்றால் செல்லவில்லை. 2012 வருடம் முதல் செல்லவில்லை என்றால் சரிதான். 2012 முதல் நானும் பள்ளிக்கு வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எந்த தேதியுல் பள்ளியை தாக்கினார்கள் என்றால் 30.12.2012 ஆகும். எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் 200 நபர்கள் வந்தார்கள். எப்போது வந்தார்கள் என்றால் காலையில் 6.00 மணிக்கு வந்தார்கள். நான் குறிப்பிடும் தேதியில் நான் குறிப்பிட்டவாறு எந்த சம்பவமும்நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்கான பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியயப்பட்ட பிரதிவாதிகளின் கைவசம் உள்ள பள்ளிக்கூடத்தை சேதப்படுத்தினால் அது பிரதிவாதிகளுக்கு தான் இழப்பு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இரண்டு நான்கு சக்கர வாகனங்களில் வந்ததாக குறிப்பிட்டுள்ளேன், மேற்படி வாகனத்தின் எண் எனக்கு தெரியாது. நான் குறிப்பிடுவது போல் எந்த வாகனமும் வரவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பழைய பாடசாலையை உடைக்கும்போது நான் அங்கு இருந்ததேனா என்றால் அங்கு இல்லை தகவல் தெரிந்து வந்தேன். எனது அண்ணன் பழைய பாடசாலை சம்பந்தமாக ஏதேனும் குத்தகை எழுதிக்கொடுத்தாரா என்றால் தற்போது நினைவில்லை. நான் எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வாடகைதாரராக இருந்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் குத்தகைதாரராக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் சிசி 365/2000 என்ற வழக்கின் தீர்ப்பு என்றாலும் அதில் நானும் வாதியும் 1, 2 குற்றவாளிகள் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. எனக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணமான வா.சா.ஆ.4 ல் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணம் எத்தனை வருடங்களுக்கு எழுதப்பட்டது என்ளறால் அதுபற்றி எனக்கு தெரியாது,

கையெழுத்து மட்டும் செய்தேன். வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் அதை நானும் எனது அண்ணனும் ஏற்படுத்திக் கொண்டோம் என்றாலும் சரிதான். வா.சா.ஆ.4 2014 வருடத்திற்கு பின்பு செல்லாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு பின்பு எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்தது என்றால் சரியல்ல. நான் வாதியான எனது அண்ணனை காப்பாற்ற வேண்டும் என்ற எணண்த்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

இரணியல்